Kulasekhara Azhwar, the saint-king, describes Ayodhya as a model city of culture devotion and erudition. Here was born Rama, the brightest jewel of Surya dynasty to give joy and cheer to king Dasaratha and Ayodhya's citizens.[5]

Kulasekhara's Ayodhya is having big ramparts all around This is a beautiful city being the light of lights Here stands the big idol of Hanuman to give encouragement, solace and succour to one and all

(6) *Benaras*

It is said that Tulasidas, having been infatuated with a popular Hanuman Deity in this city of culture, concentrated on Hanuman, got vision, and wrote his Ramayana - Ramacharita Manasa. He has enriched Hindi Literature by his epoch-making Ramayana which is popular in the country along with Kambar's and Valmiki's.

Epilogue.

We have come to the end, traversing the holy centres, crossing seas, bathing in rivers in search of Hanuman. Even today Anjaneya in the leaping pose is seen in the Temple at the Mysore Palace Gate, being frequented by Maharajas and Mahapurushas, not to speak of people of all ranks and levels of society.

May Chiranjeevi Hanuman make us all healthy and happy and pave the way for our spiritual peace!

(THE END)

---

4. கற்பார் இராமபிரானையல் லால் மற்றுங் கற்பரோ:

5. அங்கணெடு மதிள்புடைசூ ழயோத்தி யென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
வுணமுழுது முயக்கொண்ட வீரன் றன்னை.
செங்கணெடுங் கருமுகிலை யிராமன் றன்னைத்

BIRTH OF BUDDHA

Sri S SUNDARACHARI, *Little Kanchipuram*

In the Golden days of old
Stood alone a nation bold,
It was Nepal stately state
Free from ills of slavish fate

At the foot of the icy hill
It grew in glory grit and will,
It rose so swift in mind and might
In humble flight to lofty height

Lovely lands capes, scenes serene,
Lakes and lawns and gardens green,
Stones precious and healing herbs
Made in short the land superb

King Suddhodhan took its reign,
Minding always peoples' pain;
Matchless Maya wore the crown
As his queen and shared the throne

Kapilavastu as its seat
Smiled in simple splendour sweet;
Free willed fortune fair and rare
Safely sat and settled there

Treasure was there and pleasure was there
What was wanted was not there;
All is ill and a heaven is hell
If a child is not to dwell.

Aging though the Royal pair
Were not blessed with one as heir;
The queen was restless and so bad,
The king was always feeling sad.

Towards that aim they tried and tried,
Before the Gods they bowed and cried,
All the saints were called and told,
But cruel fate did keep its hold.

Poor were picked and fed in full,
Beggers went with pockets full;
Fasts and prayers progressed, though
Signs of hopes were falling low

Leaves of life the learned read,
Palmists tried to think ahead,
Maya was a Maya still!
Motherhood was a murmur still!

To bed confined the queen so fair
Went stale and pale with worn care!
Dumb and mum she sat alone
Motionless as marble stone .

Not a murmur not a sigh,
Not a word with low or high,
Silent sobs and eyelid drops
Drooped and dropped in hearing throbs

Let alone the king and queen,
They could not but feel so keen;
Strange it was the entire state
Moved and mourned in helpless state !

All was gloomy agony full
Lost to lustre dry and dull;
Courts were empty, hearts were dry
The land was one of huent cry

Servants lost their sense of mind,
And left their works undone behind,
Ovens were not lit at all
Vacant was the dining hall

Mourning mothers were all shocked,
Crying cradles were not rocked,
May the Gods bless Maya soon
Was their only craved of boon

Cows and calfs abstained from food,
Cuckoos all were out of mood,
Day did break but cocks cried not
Buds were buds but blossomed not.

The queen was wailing days and nights
She swooned and fancied horrid sights,
Day dreams bothered all around
Death in life was dancing round.

She fancied babies on her breasts
Knocking her with tightened fists,
Shame! Oh! barren lady shame!
Was then howbing silly game!

Broken heart and shaken thought
Maya was a melting pot!
Thousand thoughts in thousand knots
Patted and pained her feeble sports

Fact or fiction who can say?
She did see it in dismay!
Snow white Elephant making room
Waded into Maya's womb!

Stunned and startled rose the queen
And told her husband what was seen,
The king puzzled atonce beckoned
Aged seers all well reckoned

They came and thought for long and said
The dream foretold a hope ahead,
A prince or saint, they were not sure
A son to him they could assure

Thanks to them they did not lie
The king could see the truth so nigh;
Signs of motherhood set in soon,
The queen of Nepal was in tune!

Her lovely limbs slowly softened,
Smiling eyes were wide opened,
Breasts were bulging storing milk,
Her waist was finely building bulk

Looks of shyness lingered low,
Steps were swan like moving slow,
Deepened breath and fainting look,
Changed, she wore a new outlook!

All the palace was astir,
Willing waiters flocked round her,
Only she should show her wish
All of them will run in rush

Food was made ready by some,
Beds of lorns were spread by some,
Some on either sides were there
Firmly faming her with care.

Ringing music was in swing,
Dancers played before in rings,
Enchanting had, the shepherd boy-
Krishna's life was sung in joy

Famous painters showed their skill,
In painting pretty babies well,
They in turn in varied rows
Creapt and crawled on Mayas brows.

Months were briskly marching on,
Maya's hopes were switching on,
Prince of Nepal had his birth
Love and lustre spread on earth!

Mighty Bharata's golden land
Rose and played at stately band!
Life was full of life and mirth
Happy land had another birth

Himavan mighty mountain king
Burst in million sparkling springs,
Spraying pearls through splashing tides
Swollen Ganga showed her prides

Serpent like with hood unfurled
Sindhu played well getting thrilled,
Krishna and Godavari
Danced in tune with Kauveri.

Vindhya standing on its toes
Kept on watching grand in pose!
Eastern ghat and Western ghats
Watched and watched the wonder spots

Grand old people gathered strength,
And learned to jump and run at length,
The blind could see! the lame could walk!
What a wonder was the talk!

Cornful were the barren lands,
Grass was seen in wastefull sands
Cows all with their udders full
Raining milk ran cheerful!

Thanks to Maya-the child was born
To sane the world from getting torn,
Often God in hunan form
Takes his birth to bring reform

(*Translation of the Author's own Telugu original ' Buddha Geeta.'*)

INTEGRATION: SCIENCE AND SPIRITUALITY

Dr S RAMAKRISHNAN,
Reader in Biochemistry,
Jawaharlal Institute of Post-graduate Education & Research,
PONDICHERRY.

" And yet so poor is Nature with all her craft . that from beginning to end she is but one stuff " writes Emerson bringing home the unity in diversity. Whatever may be the final manifestations of matter, the fundamental building stones of all types of matter are the same – the atoms which are composed of the ultimate particles viz electrons, protons, neutrons, mesons and the like Thus everything in Nature, animate or inanimate is made up of the same stuff and this has been proved unequivocally by the science of Chemistry and Physics

Biochemistry shows that many metabolic reactions are the same in plant and animal kingdom. For instance, Tricarboxylic acid cycle operates exactly alike in plants and animals showing that respiratory process is the same in both In the animal kingdom, many biochemical reactions are the same in the relatively evolved animals As an example, in monkey, dog, rabbit and the human being, the waste product of protein catabolism is urea and all of them are called ureotelic animals. Even the blood costituents are nearly of the same concentration. Rat blood and human blood contain about 80 mg% glucose This establishes the unity between different species. Again, taking any particular species, major metabolisms are almost the same between the two sexes. If there are some differences in biochemical processes between the male and the female, these are mostly brought about by the influence of respective hormones Even here, there is no male who does not have small amount of female sex hormones and no female without male sex hormones It is only the relative concentration of the sex hormones that makes a male masculine and a female feminine When, unfortunately, there is over production of male sex hormones in a few females, they become masculine Thus there is biochemical unity between the two sexes Anatomically also it is known that rudimentary sex organs of one sex are present in the opposite sex Therefore, man is also a womon while a woman is also a man Even the different English words suggest the same; the word 'woman' has 'man' in it, the word 'female' has 'male' and the word 'lady' has 'lad' in it Thus anatomy also proves unity in diversity

These are days of integration and we have integrations like national integration, linguistic integration, emotional integration, political integration, integrated medicine, vertical horizontal and diagonal integrations. One can also integrate Science and Spirituality. All religions preach that God is one, all pervading and omnipresent Advaitha philosophy visualizes Jeevatma, the manifestation of God (Paramathma) in every living being and the Jeevatma is the uniting link of all creations. Whatever may be the size of the body or charm there is value for the same only so long as this life is present, once life is extinct, irrespective of the form or charm, the first thing anybody wants to do is to dispose off the till-then-cherished body. In so far as life which is indefinable it is responsible for the multiple functions of all creations, it also indicates unity in diversity. Again, as all forms of life have the divine spark, the hidden light received from the Almighty, they are all the children of one Creator and hence become brotheren and sisters Upanishads say the

same. "Ohe should see oneself in every creation and in oneself every Creation", no matter the creation is Man, beast or bird "Yasthu Sarvani Bhoothani, Atmanyeva Anupasythi; Sarva Bhootheshu Cha Athmanam". Bhagavath Gita also which is one of the Prasthana Thraya (Authority to follow) says the same Lord says he who sees Him in every creature everywhere and sees everything in Him will always be blessed "Yo Mam Pasyathi Sarvathra Sarvam Cha Mayi Pasyathi" (6;30). Again in the same the Lord says that He is the seed for all creations "Beejam Mam Sarva Bhoothanam Viddhi Partha Sanaatanam" (7; 10). Then He says that the root of the whole universe which could be compared to a Pepul tree is the Lord Himself and as from Him who is up above, others have come down, it is as if the tree is having its roots upwards "Oordhvam Moolam Adhah Sakham" (15;1). All creations are like the many branches and as such are essentially alike and intimately united.

The Theosophical Society prayer stresses the oneness of all creations in the following lines.

"O, Hidden life, vibrant in every atom,
O, Hidden light, shining in every creature"

According to Bhagavatha, all are Nayakis and thus are alike before Lord who is the only Nayaka.

Thus both Science and Spirituality stress on the oneness of all creations in basic structure and many a function Naturally they prescribe universal brotherhood Though some opine that science and technology are responsible for the confusions and chaos and troubles and turmoils of life, it is to be emphasized that Science is always neutral and deserves commendation and not condemnation It helps to establish a bond of friendship and brotherhood between the people of various nations This is because Science grows by mutual contacts and a common enterprise Scientists are also humane, sympathetic and peace-loving No less a personality than Dr. Oppenheimer who was responsible to a large extent to make the Atom Bomb a reality was the first to cry halt to the alarming stock piling of atomic weapons notorious for their inflexibility and catalysmic consequences. Another famous Scientist De Broglie expressed grave concern over the Hydrogen Bomb experimental explosions, as the radioactive dust, the death-dust as it is called, will cause serious pollution hazards Thus, when Science and Spirituality stress the need for universal brotherhood and love, why not one practise and try to become a "universal man". Nothing is lost in loving all God's creations and be of some selfless unostentatious service "Love thy neighbour as thyself" says Christianity. 'It is love, it is love that makes the world go round (Anonymous) Love conquers all, let us too yield to love' (Virgil). It is only after the Ancient Mariner loved the countless aquatic creatures of the Sea he got salvation and Coleridge equates love with prayer "He prayeth well who loveth well, both Man and bird and beast,

He prayeth best who loveth best,
All things both great and small,
for the dear God who loveth us,
He made and loveth All"

Hence there is no prayer more valuable than love There is also no season or reason for love. Love is equated with God in the Tamil saying *Anbe Sivam* When such is the case how nice it would be if every one

Starts the day with Love
Fills the day with Love
Spends the day with Love
Ends the day with Love and thus Lives in Love!



TIRUMALA TIRUPATI DEVASTHANAMS, TIRUPATI.

CONSTRUCTION ON DONATION BASIS



With a view to make the devotees and other Philanthropic public better associated with the activities of the T. T. Devasthanams, the management has been pleased to accept donations for the following work

RENOVATION OF FOOT-PATH

TIRUPATI - TIRUMALA

19 Hecto Metre **Rs. 18,000/— Each H.M.**

Philanthropic public desirous of participating in the said works may kindly send the amounts at the aforesaid rate through Demand Draft drawn in favour of the Executive Officer, T. T. Devasthanams, Tirupati, together with a requisition for accepting the donations.

Any further information in this regard can be had from the Executive Engineer-I, T.T. Devasthanams, Tirumala, either in person or by correspondence.

(Sd.) P. S. RAJAGOPALA RAJU,
Executive Officer.

HIDE AND SEEK.

Sri K. R KUPPU SWAMY, M.A.,
HYDERABAD-36

I am at a game of Hide and Seek.
My Friend now I have to find.
But where is He, I can't divine
I run to the sea-shore, I but perceive the waves
I lose my self in the heart of a forest.
There I hear but the whiff of the wind
I look up at the sky, the sun meets my eye.
His ray is bright and reminds me of His eyes bright.
I hear Him laugh but when I look that way,
I see a child, clapping its little hands in glee and shrieking with delight
I my steps be take to where men congregate
And wonder whether He is hiding behind His Namesake.
What are they doing there in the Temple
Are they too playing the same game as mine?
I feel Him in parts.
I hear Him in music's melody and the lisping of the babe.
I see him in the rainbow colours and their Source,
The beam of the Sun
Yes, the beam will be my ladder
Up I go to see if He is there
Vain, Vain I climb and scan!
Where are you, my friend?
I accept defeat, I can't find you.
Show your self to me, am I not thy friend?
His shout comes from very near me.
Is He behind my back?
I turn, I find Him not.
In despair I cry "Enough, enough of this game
I have had enough.
Show me Thy face.
I hear his laughter again?
Where art Thou?
His laughter then comes from very near.
I look round and find Him not.
I look in Lo! Thou art there!
I run after Him. He runs on, in.
And would not stop for me.
I cry! "My Friend, my Friend, stop
I can no longer run, I am a weary.
I swoon, I fall speech less.
My Friend had had His heart's fill of the game
He turns round with open arms
I run into His arms, into Him
Never to part again



ஸப்தகிரி

மலர்: 5]   டிசம்பா 1974   [இதழ்: 7

ஆசிரியா:

கே. சுப்பாராவ, எம் ஏ.

திருமலை - திருபபதி தேவஸதானம, திருபபதி.

★

அசசிடுபவா:

எம். விஜயகுமார் ரெட்டி,

மேலாளா,

தி. தி. தேவஸ்தானம அசசகம, திருபபதி.

★

ஆண்டுச் சந்தா ரூ. 5/—

தனிப பிரதி 35 பை

★

மாத இதழுககும,

மற்றும் இதர விபரங்களுக்கும்:

ஆசிரியர்,

திருமலை-திருப்பதி தேவஸ்தானம,

திருப்பதி.

பொருளடக்கம்



★

ஆசிரியர் உரை

தற்போதைய 'ஸப்தகிரி' யை ஐந்து தனிமொழி பத்திரிக்கைகளாக அதாவது ஆங்கிலம, தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் வெளியிடும் தன் கருத்தை மேலாணமை சுமார் 6 மாதங்களுக்கு முன்பே வெளியிட்டு யிருந்தது. அதை செயலாக்குவதற்குரிய காலம் நெருங்கியிருநதும், சில தொழில் நுட்ப விதிமுறை முடிவுகளுக்காக மேலாணமை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. அதற்குப்பிறகு மற்றும் பல மூக்கிய தகவலகளுடனும், அதிக கட்டுரைகளுடனும் இப்புதிய இதழ வாசகர் கைகளுக்குக் கிடைக்கும். ஆன்மீகத்தைப் பரப்புவதற்குத் துணையாக நின்று இறைவனுக்குத் தொணடு புரியும் ஸப்தகிரி வாசகர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும், எங்களுடன் பணிபுரியும் தி. தி. தேவஸ்தான தகவலறிவிப்பு நிலைய தி. தி. தேவஸ்தான ஊழியர்களுக்கும எங்களுடைய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சாமானியனுக்கும் எளிதில் விளங்குமாறு சமய அறவுரைகளை பரப்பும் பணியில் சிறந்தோங்கி தொண்டு புரியும் வகையில், பலகட்டுரைகளை எழுதிய, எழுதும் எழுத்தாளர்களுக்கும் எங்களுடைய புத்தாணடு வாழ்த்துக்கள் உரித்தாகுக! ஆனால் 'ஸப்தகிரி' யில் இந்திப்பிரிவிலும், கன்னடப்பிரிவிலும் இருந்துவரும் உற்சாகமற்ற ஆதரவை இங்கு குறிப்பிடுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அழியும் இம்மாய உலக வாழ்க்கையிலிருந்து சாதாரண மனிதன் தன்னை விடுவித்துக் கொண்டு. அவ்வெல்லாம் வல்ல இறைவனின் அருள் பெறும் வகையில், பல்வேறு மொழிகளில் சமயப் பத்திரிக்கையை வெளியிடும் நிறுவனம் இத்திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஒன்றுதான் என்ற உண்மையை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்.

மாய வாழ்க்கையில் சுழன்று ஓடும் மக்களிடையே ஆன்மிக ஞானத்தைப் பரப்புவதற்கு அவர்களுக்கு உதவி புரியும் வகையில் ஆன்மிகக் கருவூலமாக விளங்கும் சமயப் பெரியோர்களுக்கு நாம் நம்முடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கவில்லையென்றால், நாம் நம் கடமையில் தவறியவர்களே ஆவோம்.

காரணமும், கர்த்தாவும் நீங்களே. நாங்கள் அக்கர்த்தாவை வெற்றி பெற செய்வதற்குத் துணை புரியும் வெறும் கருவிகள் தான். ஆகவே நம்முன்னோர்கள் கூறியபடி இந்த கலியுகத்தில் நமக்கு நம்பிக்கையூட்டுவது "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற அறிவுரை ஒன்றுதான்.



செய்திச் சுருக்கம்

ஸ்ரீ கபிலேஸ்வரசுவாமியின் வருடாந்திர தெப்போற்சவத் திருவிழா 26-12-74 லிருந்து 28-12-74 வரை நடைபெறும். துணைப் பெண் தெய்வத்துடன் இறைவனின் உற்சவமூர்த்தி அழகான வணண விளக்கு ஒப்பனைகளுடன் கூடிய தெப்பத்தில் வீற்றிருக்க, அருகில் உள்ள கபிலதீர்த்தம் அல்லது ஆழ்வார் தீர்த்தம் என்ற குளத்தில் சுற்றி வருவார். முதலிரண்டு நாட்கள் ஸ்ரீ விக்னேஸ்வரர், ஸ்ரீ சந்திரசேகரர், ஸ்ரீ சுப்ரமண்யர் ஆகிய தெய்வங்களின் உற்சவத்திற்கும், மூன்றும் நாள் கபிலேஸ்வரருக்கும் ஒதுக்கப்படும். தி.தி. தேவஸ்தான மேலாண்மையின் கீழ் இருந்து வரும் விஷ்ணு கோயில்கள் பலவற்றில், கபிலேஸ்வர கோயில் ஒன்றுதான் ஒரே ஒரு சிவன் கோயிலாகும். இங்கு கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் அருகில் உள்ள அழகிய சூழ்நிலைகளுடன் விளங்கும் மலை வீழ் அருவியும் ஒன்று உள்ளது. இங்குள்ள சிவலிங்கத்தை கபிலர் என்ற முனிவர் திருநிலைப்பாடு செய்ததாக வரலாறு கூறுவதால், இங்குள்ள தெய்வமும் கபிலேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார்.

* * *

1975, ஜனவரி முதல் தேதியன்று இறைவனை தரிசிக்க வரும் யாத்திரிகப் பொது மக்கள் கூட்டம் அதிகமாக இருக்குமாகையால், 30-12-74, 31-12-74, 1-1-75 ஆகிய மூன்று நாட்களில் தேவஸ்தான குடில்களுக்கு 'தனி ஒதுக்கீடு' (Reservation) கிடையாது. என்றாலும் அப்போது கிடைக்கும் சமயத்தைப் பொறுத்து, தங்குவதற்கு இடம் ஒதுக்கப்படும்.

அமெரிக்காவில இந்தியக் கோயில்கள்

போகம் பொங்கி வழியும் சொர்க்கத்தைக் காட்டிலும், பெற்ற தாயிடத்தும், பிறந்த தாய் திருநாட்டிலும் தான் ஒருவன் அமைதியும், இன்பமும் அடைகிறான் என்று கூறுவார்கள். இதை, அயல்நாடுகளில் வாழும் இந்தியர்களிடையே எழும் ஆன்மிக விழுப்புணர்ச்சியே காட்டுகின்றது. இன்னும் கூறப்புகுந்தால், மேலைநாட்டு நாகரிகம், இந்திய கலாசார நாகரித்தின் தொடர்பினால்தான் மறுமலர்ச்சி அடைந்து வருகிறது என்று கூறலாம். அயல்நாடுகளில் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்ட யோக ஆராய்ச்சி நிலையங்களும், பல்வேறு மேலைநாடுகளிலும், பல்கலைக் கழகங்களிலும் வடமொழி புகுத்தியிருப்பதும் இதை நிருபிக்கின்றன இதைத் தவிர வெளிநாடுகளில் குறிப்பாக அமெரிக்காவில் எழுப்பப்படும் கோயில்களும் இதை உறுதிப்படுத்துகின்றன.

இந்துக்கள், மற்றும் பல சான்றோர்கள் பலர் அடங்கிய இந்து கோயில் சம்பந்தப்பட்ட குழு ஒன்று, பகதி நெறி பூண்ட பொதுமக்களின் உதவியினால், விநாயகர் கோயில் ஒன்றை நியூயார்க்கில் கட்ட, ஏற்பாடுகள் செய்து வருகின்றது. அதுபோலவே அமெரிக்காவில், பீட்ஸ்பர்க் எனும் இடத்தில், திருவேங்கடவன் கோயில் ஒன்றை எழுப்ப, திருமலை போல் சூழ்நிலைகள் பல ஒத்து இருக்கும் சுமார் 7 ஏக்கர் நிலப்பரப்பு ஒன்று மேற்கூறிய குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

கட்டிடப்பணி ஒன்றுதான் பீட்ஸ்பர்க்கில் தொடக்கப்படுமே தவிர, மற்றைய கைவேலைப்பாடுகள், விக்ரகங்கள், கதவுகள் போன்றன இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு அவை அமெரிக்காவிற்கு பின்னர் ஏற்றுமதி செய்யப்படும். மேலும் பீட்ஸ்பர்க்லேயே நடைபெறவேண்டிய சில கோயில்கள் சிற்பங்கள்சம்பநதப்பட்ட வேலைகளுக்கு. இங்கிருந்து சில தலை சிறந்த சிற்பிகளை அமெரிக்காவுக்கு

அனுப்ப முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. இராஜ கோபுரத்தைத் தவிர இப்பணிகளுக்கு சுமார ரூ 8 இலட்சம் செய வாகும்.

1974 ஆம் வருடத்திற்குள்ளேயே கோயில் சம்பந்தப்பட்ட அடிமட்ட வேலைகள் தொடக் கப்பட்டு 1975 செப்டம்பர் மாதத்திற்குள் மற்றைய கோயில் சம்பந்தப்பட்ட வேலைப் பாடுகளும், விக்ரக திருநிலைப்பாடும் செய்து முடிக்கப்பட்டு விடும் என்று மேற்கூறிய குழு நம்பிக்கைத் தெரிவித்திருக்கின்றது.

வெளிநாடுகளில் இருக்கும் இந்தியாகள் ஒன்று கூடவும், பொதுவாக ஆன்மிக விழுப் புணர்ச்சி அவர்களிடையே ஓங்கவும், தி.தி தேவஸ்தானம் தன்னாலியன்ற சிறு உதவியை செய்துள்ளது. மேற்கூறிய திட்டங்களுக் காக ரூ. 7 இலட்சம் (பொருள்வடிவில்) தி.தி தேவஸ்தானம் ஒதுக்கியது இங்கிருந்து ஸ்ரீவேங்கடேஸ்வரர், ஸ்ரீபத்மாவதி, ஸ்ரீ ஆண டாள், ஸ்ரீ கருடாழ்வார் ஆகிய தெய்வ விக்ர கங்களையும் அன்பளிப்பாக தேவஸ்தானம் வழங்கும். அவை, கட்டிட வேலைகள் முடிநத பிறகு அமெரிக்காவுக்கு அனுப்பப்படும்.

இதைத்தவிர, அமெரிக்காவிலுள்ள நியூ யார்க்கிலும், பீட்ஸ்பர்க்கிலும் தி.தி.தேவஸ் தானம் இரண்டு தகவலறிவிப்பு நிலையங்களை திறக்க முயற்சி எடுத்து கொண்டுள்ளது.

யோக ஆராய்ச்சி நிலையம்

திருமலையும், திருப்பதியும் விரைவில் யோக பயிற்சி நிகழ்ச்சிகளுடனும் திகழப் போகின்றது. திருமலையில் ஓர் யோக ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ, அரசு முடி வெடுத்துள்ளது. தி. தி. தேவஸ்தானத் தாரால் தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் இந்நிலையம் உடனடியாக செயற் படும். தி. தி. தேவஸ்தானம் இதற்காக ரூ. 5. இலட்சத்தை ஒதுக்கியுள்ளது.

கீழ்வருபவர்களைக் கொண்ட செயற்குழு ஒன்றை அரசு நிறுவியுள்ளது.

திரு. கே. கே. ஷா, ஆளுநர் - தமிழ்நாடு
தலைவர்

திரு ஜே. வெங்கல்ராவ், ஆந்திர மாநில
முதலமைச்சர்-துணைத்தலைவர்.

அலுவல் சார்பான உறுப்பினர்கள்

சுகாதார அமைச்சர் — ஆந்திர மாநிலம்
அறநிலைய அமைச்சர் — ஆந்திர மாநிலம்
இயக்குநர் — மருத்துவத்துறை —
ஆந்திர மாநிலம்
துணைவேந்தர் — திருவேங்கடவன்
பல்கலைக் கழகம், திருப்பதி
தலைவர் — தி. தி. தேவஸ்தான பொறுப்
பாண்மைக்குழு, திருப்பதி
செயலாட்சித் தலைவர் — தி. தி. தேவஸ்
தானம், திருப்பதி

மற்ற உறுப்பினர்கள்

திரு. சல்லா சுப்பாராயுடு,
திரு. டாக்டர். ஜி. எஸ். மால்கோட்டே
திரு. இராமனந்தா யோகி
பேராசிரியர். பி. இராமமூர்த்தி
டாக்டர். கே. எஸ் சஞ்சீவி
டாக்டர். வி. நாராயணசுவாமி
திரு. எஸ். அண்ணாதுரை ஐய்யங்கார்

* * *

திரு. ஏ. ஸ்ரீபாதராவ், பி.எஸ்ஸி., பி.ஈ, டி.ஐ.ஐ.எஸ்.ஸி. (ஏ.இ ஆர்.ஓ.) அவர்கள் தி. தி. தேவஸ்தான விருப்பார்வ பொறி யாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தி. தி. தேவஸ்தான சொகுசு வண்டி

தி. தி. தேவஸ்தானத்தின் கீழ் இருக்கும் பல்வேறு கோயில்களை குறைந்த நேரத்தில் யாத்திரிகப் பொதுமக்கள் தரிசிக்க, தி. தி. தேவஸ்தானம் ஏற்கெனவே சொகுசு வண்டி ஒன்றை செயற்படுத்தி வருகின்றது. தற்

போது, மேலும் சில இடங்களைப் பார்க்கவும் பேருந்தின் கால நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன. இம்மாற்றம் 20–11–74 லிருந்து அமுலாக்கப்பட்டு இச்சொகுசு வண்டி திருப்பதியிலிருந்து காலை 8 மணிக்குப் புறப்பட்டு, கீழ்வரும் இடங்களுக்குச் சென்று இரவு 8 மணிக்கு திருப்பதியை அடையும்,

திருப்பதி,	பு. நேரம்	8-00	காலை
கபிலதீர்த்தம்	சே. நேரம்	8-15	,,
	பு. நேரம்	8-45	,,
சந்தரகிரி கோட்டை	சே. நேரம்	9-15	,,
	பு. நேரம்	9-45	,,
ஸ்ரீநிவாசமங்காபுரம	சே. நேரம்	10-00	,,
	பு. நேரம்	10-15	,,
திருச்சானூர்	சே. நேரம்	10-45	,,
	பு. நேரம்	11-00	,,
திருக்காளத்தி	சே. நேரம்	11-45	,,
	பு. நேரம	1-30	மாலை
கைலாசகோணா	சே நேரம்	2-45	,,
	பு. நேரம்	3-45	,,
நாகலாபுரம்	சே. நேரம	4-45	,,
	பு. நேரம்	6-00	,,
நாராயணவனம	சே. நேரம்	6-40	,,
	பு. நேரம்	7-00	இரவு
திருப்பதி	சே நேரம்	8-00	,,

பயணக் கட்டணத் தொகை நபருக்கு ரூ. 20.



முன் அட்டைப் படத்தின் விளக்கம்

மயர்வற மதிநலம் அருள் பெற்று எம்பெருமானை போற்றிப் புகழ்ந்த பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் ஆண்டாள. ஆண்டவனை அடைவதே பிறவிப்பயன் எனக்கருதிய, ஆணடாள், காரவண்ணனையே கணவனாக அடைய கோகுலத்தில் ஆயர்சிறுமியா, கணணனைப் பெறுவதற்காக வழிபாடிய மார்கழி நோன்பைத் தானும் நோற்க ஸ்ரீவில்லிபுத்தூரை ஆயர்பாடியாகவும், வடபெருங்கோயிலானைக் கண்ணனாகவும் தன்னை ஒரு கோபிகையாகவும பாவித்து செயத நோன்பின் அனுபவமே 'திருப்பாவை'. இன்னிசைப் பயக்கும் இலக்கியமான 'திருப்பாவை' கவியழகும், சொல்வளமும், பொருட்சுவையும் கொண்டு, (பக்தி) காதல் மணம் வீசும் தென்றல் திருப்பாவை. மழைக்குரிய தேவதையைக் குறித்து, சிறுமியர் பக்தி பரவசத்தோடு பாடும் போது அம மழையை, "உலகம் வாழவும், நாங்கள் மகிழ்ந்து நீராடவும, வேறுபாடின்றி தன பெருமைக்கு ஈடாக மொழியும் ஆழிமழைக் கண்ணா, நீ எம்பெருமானின் சக்கரம் போல் மின்னி வலம்புரிசங்கு போல் இடி முழக்கத்தோடு சார்ங்கம் என்றும் வில்லிலிருந்து கிளம்பும் அம்பு போல் மழை பொழிவாயாக!" எனறு கேட்டுக கொள்கிறார்கள.

இப்பாடலின் உட்கருத்து

பகவானுடைய அழகிய குணககடலில் புகுந்து, அனுபவித்து அக்கடலை உள்ளே அடக்கிக்கொண்டு உலகம் வாழப் பொழிகினற ஆசிரியர்களை மேகம் என்று கூறுவதுண்டு.

மேகம் கடலிருந்து நிரைமுகந்து, மழை பெய்து இவ்வுலக உயிர்களை காப்பாற்றுவதுபோல், நல்லாசிரியர்களும வேதஙகளிலிருந்து ஞானம் பெற்று, அவற்றை இவ்வுலகம் உய்ய உபதேசித்துக்கொணடு எங்கும் சஞ்சரிக்கின்றார்கள்.

சந்தாதாரர்களுக்கு ஓர் விண்ணப்பம்

* * *

ஸப்தகிரி மாத இதழ் ஆண்டு சந்தா ரூ. 6/—

கீழ்க்காணும் சந்தாதாரர்களின் சந்தாக்காலம் புதியகணக்கின்படி 31-1-75ல் முடிவடைவதினால், அவர்கள் இந்த விஷயத்தைக் கவனித்து கீழ்க்காணும்படி தங்களுடைய தொகையை எங்களுக்கு மணியார்டர் மூலமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். மணியார்டர் கூப்பனில் கீழ்க்கண்ட எணகள் கொண்ட சந்தாதாரர்கள் முழு விலாசத்துடன் விரைவாக தங்களுடைய சநதாக்களை செலுத்தாவிடில், அவர்களுக்கு மாத இதழ் அனுப்பமுடியாது.

T 14	T 88	T 181	T 316	T 453	T 518	T 699
T 17	T 97	T 196	T 349	T 461	T 519	T 701
T 23	T 98	T 204	T 355	T 462	T 527	T 716
T 24	T 146	T 207	T 357	T 464	T 554	T 725
T 26	T 154	T 231	T 368	T 465	T 653	T 764
T 32	T 155	T 253	T 369	T 468	T 686	T 1001
T 38	T 156	T 270	T 374	T 470	T 687	T 1002
T 46	T 178	T 271	T 379	T 472	T 692	T 1003
T 55	T 180	T 282	T 382	T 475	T 693	T 1004
T 58		T 284	T 394	T 507	T 698	T 1006
T 87		T 289	T 429	T 511		

மாத இதழுக்குச் சம்பந்தப்பட்ட பணத்தை, மணியார்டர் மூலமாக, ''ஆசிரியர், தி. தி. தேவஸ்தானம், திருப்பதி. (A. P)'' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். செக் மூலமாகவோ, அல்லது தவறுதலான முகவரிக்கோ அனுப்பும்படியான பணத்தைப் பற்றிய விபரங்களுக்கு அலுவலகம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது என்று இதனால் அறிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்.



கவனிக்கவும்

மணியார்டர் கூப்பனில் (Money Orders) சந்தாத்தொகை அனுபபும்போது, சநதா எண்ணைக குறிதது அனுப்பவும். சந்தாதாராகள் தங்களுடைய புதிய எண்ணை ஸப்தகிரி மாத வெளியீடு உறையில் (Cover) கவனிக்கவும்.

ஆசிரியர்:

முக்கவி கண்ட காப்பியம்

திரு T G அனந்த சுப்ரமண்யம், திருப்பதி

(காபேயன்)

"ஆரண்ய காண்டம்"

—※※○※※—

(முன் இதழின் தொடர்ச்சி)

"सर्पिर्लवणतैलादिक्षयेऽपि च पतिव्रता ।
पतिं नास्ति नब्रूयादायासेषु न योजयेत् ॥

என்று காசிகண்டத்தில் கூறப்பட்டுள்ளது.

நெய், உப்பு, எண்ணெய் முதலியவைகள் இல்லாத போதுகூட கணவனிடம் சொல்லக் கூடாது.

சீதாபஹரணம் என்பது மிகவும் பெரிய குற்றமாகும். ஆகையால் நமக்கு ஒரு உபதேசம் தெரிய வருகிறது.

"क्षमा शत्रौ च मित्रे च यतीनामेव भूषणम् ।
अपराधिषु सत्त्वेषु नृपाणां सैव दूषणम् ॥"

அதாவது யதிகளுக்கு சத்ருவினிடத்திலும் நண்பனிடத்திலும் பொறுமையாக இருப்பது பூஷணமாகும். அதே பொறுமை அரசர்களுக்குக் குற்றமாகும். அரசர்கள் குற்றம் செய்தவனிடத்தில் பொறுமையைக் காட்டினால் அது தூஷணமாகும்.

ராவணனுககுச் சாபம் இருக்கிறது என்பதை அறிந்த கம்பர் சீதையை தரையுடன் பெயர்த்தெடுத்தான் என்று கூறுகிறார்:

ஆண்டு ஆயிடை தீயவன் ஆயிழையைத்
தீண்டால் எனும் மேல் உரை சிந்தை செயாத்
தூண்தான் எனல் ஆம்உயர் தோள வலியால்
கீண்டான் நிலம் ஓசனை கீழ்ப புடையே"

கம்பர் சொன்ன கருத்தையே அத்யாத்ம ராமாணத்தில் பார்க்கலாம். தன் தோள்களின வலிமையைக் கொண்டு சீதையிருந்த ஆச்ரமத்தின் இடத்தைக் கீழ்ப்புறத்தில் ஒரு யோஜனை தூரம பெயர்த்தெடுத்தான்:

ராவணனால் தேரில் எடுத்துச் செல்லும் சீதை புலம்புகிறாள்.

"हा! लक्ष्मण! महाबाहो गुरुचित्तप्रसादक ।
ह्रियमाणां न जानीषे रक्षसा कामरूपिणा ॥

என்று வால்மீகி கூறுகிறார். அத்யாத்ம ராமாயணத்தில் சீதையின் அழுகுரலைக் கேட்டு ஜடாயு வந்து யுத்தம் செய்ததாக இருக்கிறது. 'அதற்குப் பிறகு சீதை ஒவ்வொருவரையும் குறித்துப் புலம்புவதாகக் காணப்படுகிறது. மற்ற ராமாயணங்களில் முதலில் எல்லோரையும் குறித்துப் புலம்பிய பிறகு ஜடாயு பார்த்ததாகக் கூறப்படுகிறது:

சீதை தன் குற்றத்தை ஒப்புக்கொண்டவளாகப்புலம்புகிறாள், அத்யாத்மராமாயணத்தில்,

"हा लक्ष्मण महाभाग त्राहि मामपराधिनीम् ।
वाक्शरेण हतस्त्वं मे क्षन्तुमर्हसि देवर ! ॥

देवर என்றால் மைதுனனுக்குப் பெயர். 'ஹே! மைதுன! லக்ஷ்மண! நான் உன்னை சுடு சொல்லால் சுட்டு விட்டேன். என்னை மன்னித்து விடு" என்று. மேலும் சீதை தன் கண்களில்படும் பொருள்களையெல்லாம் பார்த்துப் புலம்புகிறாள்.

"आमन्त्रये जनस्थाने कर्णिकारान् सुपुष्पितान् ।
क्षिप्रं रामाय शंसध्वं सीतां हरति रावणः ॥
माल्यवन्तं शिखरिणं वन्दे प्रस्रवणं गिरिम् ।
क्षिप्रं रामाय शंस त्वं सीतां हरति रावणः ॥
हंसकारण्डवाकीर्णां वन्दे गोदावरीं नदीम् ।
दैवतानि च यान्यस्मिन् वने विविधपादपे ॥
नमस्करोम्यहं तेभ्यो भर्तुः शंसत मां हृताम् ।"

'ஹே! செடி, கொடிகளே! இராவணன் சீதையை அபஹரித்துச் செல்கிறுன் என்று இராமனிடம் சொல்லுங்கள். ஹே! மால்யவான் பர்வதமே! ஹே! பரஸ்ரவனபர்வதமே உங்களை வணங்குகிறேன். என் நிலையை இராமனுக்குச் சொல்லுங்கள். ஹே! தாயே! கோதாவரியே! உன்னை நமஸ்கரிக்கிறேன். என் நிலையை இராமனுக்குக் கூறு. ஹே! காட்டிலுள்ள வனதேவதைகளே! உங்களை வணங்குகிறேன். என் நிலையை இராமனுக்கு எடுத்துச் சொல்லுங்கள" என்று. இந்தக் கருத்தை அப்படியே கையாண்டுள்ளார் கம்பர். அது கீழ்வருமாறு,

" மலையே! மரனே! மயிலே! குயிலே!
கலையே! பிணையே! களிறே! பிடியே!
நிலையா வுயிரே! நிலைநேடினர் போய்
உலையா வலியாருழை நீருரையீர "

" கோதாவரியே! குளிர்வாய் குழைவாய்
மாதா அனையாய் மனனே தெளிவாய்
ஓதாதுணர்வாருழை ஓடினை போய
நீதான் வினையேன் நிலைசொலலையோ "

இரகுவம்சத்தில் காளிதாஸன் 14-வது சர்கத்தில் கூறுகிறுன.

"तथेति तस्याः प्रतिगृह्य वाचं रामानुजे
दृष्टिपथं व्यतीते ।
सा मुक्तकण्ठं व्यसनातिभाराच्चक्रन्द
विग्नाकुररीव भूयः ॥

नृत्यं मयूराः कुसुमानि वृक्षाः दर्भानु-
पात्तान् विजहुर्हरिण्यः ।
तस्याः प्रपन्ने समदुःखभावं अत्यन्तमासीत्
रुदितं वनेऽपि ॥"

இராவணன தூக்கிச் செல்லும் சீதையின குரலைக கேட்டு மயில் தன் ஆட்டத்தை விட்டது. மரங்கள் மலர்தலை மறந்தது, மான்கள் மேய்தலை விட்டது இல்விதம் தன் தன் கார்யங்களை விட்டு துக்கத்தில் ஆழ்ந்திருந்தன. இக்கருத்தை வால்மீகத்திலும் பாாக்கலாம்.

இவ்விதம் இராவணன் சீதையைத் தூக்கிக் கொணடு ரதத்தில் சென்று கொண்டிருந்த பொழுது சீதையின் குரலைக் கேட்டு, தூங்கிக் கொண்டிருநத ஜடாயு விழித்துக்கொணடு, மலையின் உச்சியிலிருநது நல்ல வார்த்தையைக் கூறியது.

"वनस्पतिगतः श्रीमान् व्याजहार शुभां गिरम् ।
என்ன நல்ல வார்த்தையென்பதை துளசிதாஸர் கூறுகிறுர்.

"सीते पुत्रि ! करसि जनि त्रासा ।
करिहौं जातुधान करनासा ।

இந்த கருத்தை அநுமந்நாடகம் கூறுகிறது.

"मा भैषीः पुत्रि सीते व्रजति मम पुरोनैष दूरं दुरात्मा ।"

என்று. கம்பரும்,

" ஆண்டு உற்று அணங்கினை அஞ்சல் என
தீண்டுறறிலன் என்று உணா சிந்தையினுன்
மூண்டு உற்று எழு வெம்கதம் முற்றிலன்
மீண்டு உறறு உரை ஆடலை மேவினன் ஆல் "

சடாயு சீதைக்கு அபயம் அளித்துவிட்டு, சீதையை நோக்கிற்று சடாயு. சீதை இராவணனுல் தீண்டப்பட வில்லையென்பதை அறிந்து ராவணனுடன் பேச ஆரம்பித்தது என்று கூறுகிறுர். ஆகையால் இராவணன் பூமியுடன் பெயத்தெடுத்துச் சென்றுன் என்பதற்கு இதுவும் ஓர் சான்ருகும். (தொடரும)

இந்து சமயக் கையேடு

திரு அ. நடராஜன், திருப்பதி.

★ ★ ★

(முன் இதழ் தொடர்ச்சி)

கோவிலைத் தூய்மையாகவும் புனிதமாகவும் வைத்துக் கொள்வதற்காக மிகுந்த கவனம் எடுத்துககொளளப்படுகிறது. கடவுள் தூய்மையானவர், பூரணமானவா. மிகச் சிறிய அசுத்தச் செயலுக்குக் கூட தூய்மைப படுத்தும சம்புரோட்சணச் சடங்குகள ஏற பட்டுள்ளன. இதன் உட்கருத்து என்ன வெனில, தூய்மையே உருவானவரும் எவ் வகை மாசும இல்லாதவருமான கடவுள், சிறிதளவிற்கே அசுத்தமடைந்த இடங்களாயினும் அவை தாம் இருப்பதற்குத் தகுதியற்றவை எனக் கருதி அங்கிருந்து அகன்று விடுகிறுர் என்பதாகும். பக்தன் தூய்மையான உள்ளத்துடனும உடலுடனும் கோவிலுக்குள் செல்ல வேண்டும். தூய்மை இறைமைக்கு அல்லது தெய்விகத் தன்மைக்கு வழி கோலுகிறது, இதயத்தில் தூய்மையாக இருப்பவனே இறைவனே அடைய முடியும். கோவிலே அசுத்தம் செய்து விட்டால், அதைத் தூய்மைப் படுத்துவதற்குச் சில சடங்குகள் செய்யப் படுகின்றன. கோவிலுக்குள் அசுத்தமான ஆட்களும பிராணிகளும் நுழைந்து விட்டால் அதற்கான சம்புரோட்சணச்சடங்குகளும் வகுக்கப்பட்டுள்ளன. காளான், எறும்புப்புற்று ஆகியவை இருந்தால்கூட கோவிலேத் தூய்மைப் படுத்த வேண்டும். நாட்டிற்குத் தீமையை முன்னறிவிக்கும் தீய நிமித்தங்களுக்கான தூய்மைப் படுத்தும் சடங்குகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

பாரதநாடு உலகப் பொது சமயத்தின் பிறப்பிடம், கடவுளின் அவதாரங்கள், ரிஷிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஆசாரியர்கள் மற்றும் தெய்வ தரிசனம் கண்டவர்கள் ஆகியோர்களின் புனித பூமி. இறைவனின் அவதாரஙகளும் தெய்வப் புருஷர்களும் தோன்றிய இடங்கள். மனிதகுலத்தை ஆன்மிகமுள்ளதாகச் செய்வதற்கான அவர்களது வருகையினுல் புனிதமடைந்த க்ஷேத்திரங்கள் அல்லது புண்ணியத் தலங்கள் எனப்படுகின்றன. இந்தியத்தாய் யுகயுகமாகக் கணக்கற்ற முனிவர்களேயும மகான்களேயும் ஈன்றெடுத்திருந்தாலும், தெய்வப் புருஷர்களை உண்டாக்கும் ஆற்றல் அவளுககு எல்லையில்லாது இருப்பதால் அவள் எபபோதும் இளநங்கையாக அல்லது நித்திய யுவதியாக வணங்கப் பெறுகிருள். வேதாநதிகள் பிரம்மத்தைப் பரம்பொருளாகவோ சத்தாகவோ, அகில நாயகனுகவோ ஈசுவரனுகவோ கருதுகினறனர்; பக்தர்கள் கடவுளை அகத்துள்ளே உறையும் பரமாத்மாவாகப் பார்க்கின்றனர்; ஆனுல், அனைவரும் க்ஷேத்திரங்களிலுள்ள கடவுளின் திருவவதாரங்களை — அவை வரலாற்று ரீதியில் நிகழ்ந்த அவதாரங்களாக இருநதாலும் சரி, அல்லது, நிரந்தரமாக அமைந்த அவதாரங்களாக இருந்தாலும் சரி- போற்றி வாழ்த்தி ஏத்துகின்றனர். க்ஷேத்திரங்களுள் முக்கியமானவை ஏழு. அயோத்தி, அவந்தி, காசி, காஞ்சி, மதுரை, மாயை, துவாரகை. அயோத்தி இராமன் அவதரிதத தலம; (வட)மதுரை, கோகுலம், பிருந்தாவனம் ஆகியவை கிருஷ்ணனின் லீலேகளுடன் தொடர்பு பெற்றவை. ஆன்மிக இந்தியாவின் இதயம் வாரணுஸி எனப்பெறும் காசி

புனிதமானதாகக் கருதப்படும். காஞ்சி இந்தியாவின பிரதான மோட்சபுரி அல்லது மோட்சம் அளிக்கும் நகரம் ஆகும

அர்ச்சை அல்லது விககிரகம் ஐந்து உருவங்களில வழிபடப்படுகின்றது; இவற்றில் மிக முக்கியமானது திருபபதியில இருப்பதைப் போன்ற ஸ்வயம்வியக்தமான, அதாவது, பகவான் தானுகவே வெளிபபடுத்திக்கொணட உருவம; இறைவன் தமது அலகிலா அனபினுல் இங்கு அவதாரம் செய்து ஜீவன்கள் அனைத்தையும் ஆட்கொள்ளும் மீட்புக கருணையின் வடிவமாக விளங்குகிருர். மலையின் உச்சியில் இருந்து கொண்டு எல்லா ஜீவனகளையும் தமது திருவடிகளை நாடி, தமது திருவருளைப பெறறு உய்வதற்காக அவர் அழைககின்ருா. வேறு க்ஷேத்திரங்கள் ஸ்ரீரங்கம், புஷ்கரம், மேல்கோட்டை, நைமிசம் ஆகியவை. காஞ்சி பிரம்ம தேவனுல் வரதராஜருக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட திவ்ய க்ஷேத்திரம். திருவள்ளூர் ரிஷியினுல அர்ப்பணம் செய்யப்பட்டதால் அது ஓர் ஆர்ஷக்ஷேத்திரம் ஆகும். நல்ல மனிதனுல் நிறுவப்படுவது மானுஷக்ஷேத்திரம் எனப் படுகிறது. இவ்வாருன ஆரம்பம் தெரியாத கோவில்கள் புராண க்ஷேத்திரங்கள் எனப் படுகின்றன. பெரும்பான்மையான கோவில்கள் இவ்வகையைச் சேர்ந்தனவேயாகும். சைவ க்ஷேத்திரங்களிலும் இம்மாதிரியான வகைகள் உண்டு மேலும், நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்னும் பஞ்ச பூதங்களில் சிவன் உறைவதைக் குறிப்பிடும் தலங்களும் உணடு. திருவாரூரில் நிலம் அல்லது மண் உருவிலும், திருவண்ணுமலையில் தீ அல்லது சோதி உருவிலும, திருவானைக்காவில் நீர் உருவிலும். திருக்காளத்தியில் வளி அல்லது காற்று உருவிலும், சிதம்பரத்தில் விசும்பு அல்லது ஆகாச உருவிலும் சிவன் இருக்கின்ருர்: இவை பஞ்ச பூதத்தலங்கள் எனப்படுகின்றன. இவற்றுள் 'சித்' எனப்படும் ஞானம அல்லது அறிவு நிறைந்துள்ள சிதம்பரம் மிகவும் முக்கியமானதாகும். சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் சிறபபான தாயிருககும், புறத்தே நிகழவதே எனினும் அகத்தே முகிழத்து வளரும் பக்தியின் முன்னேறறத்திறகு ஓர் அடையாளமானதாய் விளங்கும புனித யாத்திரை வடக்கே அமாநாத், பத்ரிநாத், கேதாாநாத என்னுமிடங்களிலிருந்து தொடங்கி, மததியில் காசிநாத், மதுராநாத், அயோத்தியாநாத், மேறகில் சோமநாத, பணடரிநாத், துவாரகாநாத், கிழக்கில் ஜகன்ஞத் என்று சென்று, தெறகில் வேங்கடநாத், காஞ்சிநாத், ரங்கநாத், ராமனுத் என்று ஊடுருவிப் பரந்து செல்கிறது. யாத்திரையின் முடிவில் பக்தன அகக் கோவிலுள் நுழைந்து சாசுவதத்தை அல்லது பெருநிலையை அடைகின்ருன்.

தீர்த்தங்கள அல்லது புண்ணிய நீர்நிலைகள் எனப்படுபவை பவித்திரமானதொரு தலத்தின் அல்லது ஒரு மகானின் தொடர்பினுல் புனிதமுள்ளதாகக் கருதப் படும நீரையுடைய அருவிகள் அல்லது குளங்கள் அல்லது ஆறுகள் ஆகும தெய்வத் தன்மைக்கும் ஆன்மிகத் தூய்மைக்கும் அடுத்தபடியாக இருப்பது பௌதிக அல்லது உடல் தூய்மையாகும். ஒவ்வொரு தலத்திலும் அதனுடன் இணைந்த தீர்த்தம் ஒன்று இருக்கின்றது; அதில் நீராடினுல் நமது பாவங்கள் அகன்று நாம் புனிதமாகின்ருேம்: எடுத்துக் காட்டாக, திருமலையின் மீதுள்ள ஸ்ரீநிவாஸ க்ஷேத்திரத்தில் சுவாமி புஷ்கரணி என்னும் திருக்குளம் இருக்கின்றது. கடவுளின் சந்நிதிக்குச் செல்வதற்கு முன் எல்லோரும் திருக்குளத்தில் நீராடித் தங்களைத் தூய்மைப் படுத்திக் கொள்ளவேண்டும். வானுலகிலிருந்து இழிந்து விஷ்ணுவின் திருவடிகளின் வழியாக வந்ததனுல் கங்கை புனிதமானதாகக் கருதப்படுகிறது. சகரன் என்பவனுடைய பதினுயிரம் புதல்வர்களின் பாவங்

களை அகற்றி, அவர்களை சுவர்க்கத்திற்கு அனுப்புவதற்காக பகீரதனின் கடுந்தவத்தினால் கங்கை இவ்வுலகிற்குக் கொணரப்பட்டது. கோதாவரியும் காவிரியும் அங்ஙனமே புனிதமானவையாகும்.

புண்ணியத்தலங்களுக்கு யாத்திரை செய்வது என்பது இறைவனை நோக்கி ஆன்மா செல்லும் யாத்திரையின் அடையாளமே யாகும். நமது வாழ்வின் குறிக்கோளும நோக்கமும உண்மை, நலம், அழகு (சத்தியம் சிவம், சுந்தரம்) போன்ற நிலையான மதிப்புகள் அனைத்தின் இருப்பிடமான இறைவனிடம் செல்வதற்கான ஆன்மாவின் யாத்திரையேயாகும். பிறப்பு, வாழ்க்கைநிலை ஆகியவை காரணமாக மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் தவறான எண்ணங்களை தலயாத்திரை நீக்கி, இறைவனின் பரமாத்ம தரிசனத்தை நாடுவதற்கு அவனுக்குத் துணை புரிகிறது. சாத்துவிக சகிப்புத் தன்மையையும் பொறுமையையும் பெறுவதனாலும் தனது தேவைகளைக் குறைத்துக் கொள்வதனாலும் வைராக்கியத்தை, அதாவது, தானாக எல்லாவற்றையும் துறப்பது என்னும் நற்பண்பினை அவன் அடைகிறான். புண்ணிய புருஷர்களின் தொடர்பு ஆன்மிகத் தொண்டிற்கு வழிகோலும் மானிட நேய உறவையும் ஆன்ம நேய உணர்வையும் வளர்க்கிறது. எனவே தான், ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் ஆசாரியர்கள் ஆகியோர் தங்களிடத்திலும் பிறரிடத்திலும் பக்தியை அல்லது இறையன்பினைத் தோற்றுவித்து வளர்ப்பதற்காக இமயம் முதல் சேது வரை யாத்திரையை மேற்கொண்டனர்; இன்றும் மேற்கொண்டு வருகின்றனர்.


(தொடரும்)

ஓர் விண்ணப்பம்

தி. தி. தேவஸ்தான "புத்தக வெளியீடு" பிரிவு, 'சப்தகிரி' அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆகவே தி. தி. தேவஸ்தான வெளியீடுகளான நாள் காட்டிகள், பஞ்சாங்கங்கள், அஞ்சல் பட அட்டைகள், முதலியவை சம்பந்தமாக கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு எல்லா பக்தாகளை கேட்டுக்கொள்கிறோம். மேற்கண்ட வெளியீடுகளுக்கான பண அனுப்பீடுகள் எல்லாம், கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பவேண்டும்.

ஆசிரியர்:

ஆசிரியர்,
தி. தி தேவஸ்தானம்,
திருப்பதி. (ஆ. பி.)



திருவேங்கடப் பாமாலை

திரு. ஆர். கோபாலன், சித்தூர்.



(தொடர்ச்சி)

46. பாலினுள் வெண்ணெய் போன்று பரந்துளா யுலகி லென்று
சீலமே செறியும் மாந்தர் செப்புத லுண்மை யாயின்
கோலமார் நினது பாதம் கொள்கையி னெனது நெஞ்சில்
ஏலவே வேங்க டத்தாய் இயைந்திட வேண்டு மன்றே.

47. கல்லினிற் செம்பின் மண்ணிற் கனிந்துநீ யமர்தல் போன் றென்
சொல்லினி லுவந்து நின்றன நூவடி நாட்ட வேண்டும்
புல்லறி வுடைய னேனும் புண்ணியா வேங்க டத்தாய்
நல்லையா லுயிர்கட் கெல்லாம் நலிந்திட வெனைக்காண பாயோ.

48. உருவினைக் கண்டு நின்னை யுத்தமா போற்று கில்லேன்.
பொருவிலா துலகை யெல்லாம் போற்றியே புரக்கு முன்றன
அருளினைக் கண்டு நாயே கைநெகிழ ந்துருகி விம்மித்
திருவளர் வேங்க டத்தாய் திருவடி தொழுதிட் டேனே.

49. காத்தலைக் கடனுக் கொண்டு கண்ணகல் ஞாலந் தன்னைக
காத்திடும் நின்னை நோக்கிக் காவென வேண்ட மாட்டேன்
தீத்திறம புரியா வண்ணம் சீரிய நெறியி னின்று
பாத்துணும நெஞ்சை வேட்டேன் பரமனே தநதாள வாயே.

50. கடன்மடை திறந்த தென்னக் கவிதையாம் வெள்ளந் தன்னை
மடமட வென்று பாய்ச்சும் மாணபுசால் புலவா பல்லோர்
கடுகியே பாட நின்னும் காரொளி வேங்க டத்தாய்
மடமைசா லென்னைப் பாட வைத்ததை யென்னென் பேனே.

51. என்னையான மறைக்க மாட்டே னெழிலமலி வேங்க டத்தாய
மன்னிடுங் குணங்க ளில்லேன் மாசிலா நெஞ்சு மில்லேன்
பன்னிடுங் கல்வி யில்லேன் பணிவுட னொழுக்க மில்லேன்
நின்னிடம் பத்தி யில்லேன் நின்மலா கெட்டேன் யானே.

52. படைத்தனை யென்னை யெந்தாய் பாரினில் பரிவி னோடும்
படைத்தபின் காத்த ளித்தாய் பாருது நலன்க ளீந்தாய்
துடைத்திடத் தொடங்குங காலைத் தூவடி காட்டி யானின்
புடைத்திடும யமனுக் கஞ்சேன் பொருலில்வேங் கடதெம் மானே.

53. கற்பனை கடந்து நிற்கும் கவின்மலி நின்ப தத்தை
யற்பமா மதியி னாலே யாவலை யடககே னாகி
நற்பதங் தன்னை வேணடி நயந்துயான் பாட லுற்றேன்
பொற்புறு வேங்க டத்தாய் பொறுத்திடென் பிழையைத் தானே.

54. சொல்லெனு மலரைப் பாவாம் துகளது நாரால் யாத்து
மல்லலார் மாலை யாக்கி மலாநிகர் நின்பா தத்தில்
நல்லறி வுடைய மேலோா நாளுமே சாத்தி நிறபா
விலலெறி முடிக ளார்ந்த வேங்கடத் துறையுந தேவே.

55. பித்தனாய்ப் பேதை யாகிப் பிழைபல செய்யு மென்னை
யுத்தமா வெறுத்தி டாம லுவந்தருள புரிந்து காததாய்
முத்தராம் முனிவர் நெஞ்சில் முன்னிநீ வதிதல் போலென்
சித்தமாம் வேங்க டத்திற செறிந்திட வேண்டு வேனே.

56. காமமே முதலா வுள்ள கடும்பகைத் தொகையை வீட்டி
வாமமே கலையார் மாட்டு வைத்திடும் மயலை நீக்கித்
தாமமாா வேங்க டததாய் தமியனைக் காதது நின்றன்
நாமமே புகலும் பேற்றை நயந்தெனக் களித்தாள் வாயே

57. ஆயிரங் கோடி சன்ம மவனியி லெடுத்திட் டாலும்
நாயினேன் வருந்த மாட்டேன் நயந்தெனைக் காப்ப தற்கு
நீயுளான் வேங்க டத்தாய் நின்னடி போற்று தற்குச்
சேயினேன் விரும்பி நினறேன் திருவடி தநதாள் வாயே.

58 புத்தமு தளித்துத் தேவர் புன்கணை நீக்கி யாணடாய்
இத்தரை மாந்தர்க் காங்கே யீநதனை யுறுதி யெல்லாம
நித்தனே நினக்கு யாங்கள் நினைந்தெதைக் கொடுகக வல்லோம்
பத்தியும் நினக்கே சொந்தம் பரமனே வேங்க டேசா.

59. உலகுள வின்பங் கண்டே யுத்தமா மயங்கா வண்ணம்
இலகிடு நின்பா தத்தை யீந்தருள புரிய வேண்டும்
குலவுசீர் வேங்க டத்தைக் கோவிலாக் கொணடு நாளும்
நலமளித் தெம்மை யாளும் நாதனே தேவ தேவே.

60. வெறிகமழ சோலை சூழ்நத வேங்கடத் துறையுந தேவே
மறதியே யின்றி யிந்த மாநிலத் துயிரை யெல்லாம்
திறமையி னளித்துக் காப்பாய் சிறியனேன நெஞ்சி லுள்ள
மறதியை யகற்றி யுனறன் மலரடி பணியச செய்யே.

(தொடரும்)

பேர் பாடும் பாவை

திரு ர. வேங்கடரத்தினம, நெயவேலி - 1

—※o※—

பரமன் அடி பணிநது பக்தி செய்த பாவை யருள் திருபபாவை பாடியருளிய ஆணடாள சிறப்பு மிக்கவள். திருப்பாவை என வழங்கு கிறது அவள் பாடிய பாவை நோன்புப் பாசுரம. திருக்குறள என்கிருப் போல் திருப்பாவையெனவிளஙகும நாச்சியார்இன்ன முதம் சின்னஞ சிறுமகளிர் பரம்பொருள் பெருமை பாடிப் பணிவதாக அமைநதது. இறைவனின் திருநாமததைச சிறுமியா கூடிப்பாடி வணங்கும் வண்ணம் அமைந்த அப்பாசுரத்தில், நாமத்தின் மகிமை கூறப் படுகிறது. எம்பெருமானின திருபபெயரி னைப் பாடிப் பணிந்தால், உலகம் உய்யும; செழுமை பெருகும; வளம் வளரும்; என்ப தாக ஒரு பாடல் வரிசையாக அடுக்கிக் கொணடே போகும்.

புருஷோத்தமனுகிய எம்பிரானின் பெயரை இசையோடு பாடி நீராடி வணங்கி வழிபடின் நாட்டில தீங்கே இராது; மாதம மும்மாரி பொழியும். குடமகுடமாகப் பால சொறிநது தள்ளும் வள்ளல் பெரும பசுக்கள நிறைந்து நின்று, செல்வத்தைப் பெருக்கும்; இனனும எவ்வளவோ நலனகள் பெருகும்!

நாம செய்ய வேண்டுவது மட்டும் ஒன்றே ஒன்று!

''ஓங்கி உலகளந்த உததமன பேர பாடி
நாங்கள நம்பாவைக்குச சாற்றிநீரா ஆடினுல''

இதுதான் ஆண்டாள் கூறும் நிபந்தனை! இதைப் பூர்த்தி செய்யின்,

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து, நெல் வயல்கள் வளம் கூட்ட, வரிசையாக முன்னம சொன்ன செல்வங்கள் சேரும். எனவே உத்தமன் பேரினை எல்லாரு மாக ஓங்கிப் பாடி, உரக்க இசைத்துப் பாவை நோன்பு கொண்டாடலாம் என்று துயிலும தோழியரை, எழுந்த பெணகள எழுபபுகிருர்கள். இந்த இறை நாம ஸமரணை என்பது நெல்லும் நீரும் வேணடி, ஊர் செழிபபதற்காகப் பசிளம் பெணடிர் செய் யும் சிறுபிள்ளைத்தனம் என எவரும எணணி விட வேணடாம. பால் வளமும் நில வளமும் நாடி உததமன் பேர்பாடச் சொன்னதாக முதற்பாட்டின உட்கருத்து அமைந்து விட்டதோ எனக் கருதி, வேறெரு விதமாக இறைநாமத்தின பெருமை கூறபபடும் இடம் இது.

முற்றும துறந்த முனிவர்களும், எதையும் செய்ய வல்ல யோகியரும் அந்தப் பரந்தா மனின் திருப்பெயரைத் தான் ஓதுகிருர்கள் என்று கூறுவது புள்ளும் சிலம்பின காண என்னும் பாடல். அவர்கள் எந்தப்பொருளா சையினுலும் உந்தப்பட்டு உயிா வாழ்வோர் அல்லர். ஆனுல், அவர்களே பாற்கடலில் பையத் துயினற பரமனை நெஞ்சிலே நிறுத்தி அவா திருநாமத்தினையே மெலலிய இனிய குரலில் கூறிக்கொண்டு செல்கிருர்கள். அரி, அரி, அரி யென்ற பெயரினைக் கூறியவண்ணம் தெருவோடு போகும பெரியோர்களின் இனிய ஒலி காதில் நுழைநது உள்ளம் வரை செனறு தணணெனறிருக்கிறது. அதைக் கேட்க எழுநதிராய் என்பதாக இப்பாடல் எழுப்பு கிறது.

வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெளள எழுந்து அரியென்ற பேர அரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்

பாற்கடலில் நடுவே பாம்பணை மேல படுத்துள்ளவர் பரந்தாமன். அவரைத்தம் உளமார நினைந்து நினைந்து உருகி, அத்திரு நாமத்தினை மெதுவான குரலில்ஓதுகிறார்கள். பேர் அரவம் எனில நாம உச்சாரணம; பெயரினைப் பகரும் ஒலி எனக்கொளள வேண்டும். பேரோசை எனல் தவறு. மெள்ள எழுந்து என்பது விடிநத பின் மெதுவாக அவர்கள் விழித்தெழுகிறார்கள் என்று கூறுவதல்ல. முந்திய பாடலில் சிறுமியர் ஈசன நாமத்தை உரத்த குரலில் ஒரு மிக்கப் பாடினார்கள — உத்தமன் பேர் ஓங்கிப்பாட.. !- இந்தப் பாவில் யோகியரும முனிவோரும அரியென்ற பேரரவம் மெள்ள எழுப்பிக கேட்போா இதயத்தைக குளிர்விக்கிறாகள்.

அநதப் பரமனுக்குப் பெயர் அரியென்பது மட்டுமா உளடு? எவ்வளவோ பெயர்கள் படைத்த அநத நாராயணனைப் பலவாறும அழைதது வழிபடச் சொல்வது, தூமணி மாடத்து எனும பாடல, அதில துயில கலந்த தெருப் பெண்கள படுத்துள்ள பெண் ஒருத்தியை அவள் வீட்டு வாயிலிற் சென்று எழுப்புகிறார்கள். 'மாமீர், உம் மகள செவிடோ? நாங்கள் கூவியழைபபது காதில விழவில்லையோ' என்று சாடுகிறார்கள் பெண்ணின் அன்னையை. 'இதோ வநதுவிடுகிறேன் என பதிற் குரல் கொடுக்க இயலாதவாறு' அவள் ஊமையோ? அல்லது, ஏதேனும் மந்திரத்தில் கட்டுண்டு, தூங்கிக் கிடக்கிறாளோ? இலலையேல், உடலில் அத்துணைச் சோர்வோ'? என்று.

ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ
ஏமப் பெருந்துயில மந்திரபபட்டாளோ?
மாமாயன, மாதவன், வைகுநதன் என்றென்று
நாமம பலவும் நவினறே லோரெம்பாவாய.

சொல்வதறகு எவ்வளவோ எண்ணிலா நாமங்கள படைத்தவன பரமன் எனக் கூறும் இப்பாடல், மூனறே மூன றினை மட்டும் செப புகிறது. மாயக் கணணன், மாதவன, வைகுந்தன் எனபன போன்ற பெயர்களை இன்றுநெடுகச் சொல்லிக கொணடே போகலாம். என்று என்று என்பதில், இடையறுத நாம பஜனை குறிப்பிடப்படுகிறது. மூன்று திருப்பெயாகள மாதிரிக்கு இங்கே மொழியப பெறுகின்றன

இவ்வாறாக இறைவனின் இனிய திருநாமங்களைக கூறி வணங்கி வழிபடப் போகும் சிறுமியர், துயில் கலையாத தோழியரை எழுபபவும் அநநாமஙகளையே செப்புகின்றனர். மாமாயன், மாதவன், வைகுந்தன் எனும நாமம் பலவும் நவின்று தேவாதிதேவனைச சேவிக்கச செல்லும வழியில், கார்மேகக் கண்ணனின திருபபெயரினைக் கூறி எழுப்புகிறார்கள். அப்படியும் சில பெண்கள் எழாது படுத்துள்ளார்.

வீட்டு வெளி முற்றத்திற்குள்ளேயே நுழைநது, இறைந்துபாடுகிறார்கள் கண்ணன் பெருமையை. எனினும், சில பெணகள் ஆடாது அசங்காது துயிலகின்றனா. கோபம் வருகிறது பெண ஒருத்திக்கு. நாங்கள ஈசன் பேர் கூறிப் பாடுவதையெல்லாம் செவி சாய்த்துக கொணடே, என்ன தான் தூககமோ? அப்படித் துயின்று, கண்ட சுகம் தான் என்னவோ?

சுற்றத்துத தோழிமார் எல்லாரும வநது நின்
முறறம புகுந்து முகில் வண்ணன் போ பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி நீ
எற்றுக குறங்கும் பொருளே லோரெம்பாவாய்?

இவவடிகள் 'கற்றுக் கறவை' எனத் தொடங்கும் பாடலில் வருவன; கார்மேக வண்ணன் பேர் பாடக் கேட்டுக் கொண்டே, என்ன உறக்கம் எனச் சாடுவன. சுகமாய்த் தூங்குவதற்காக நாங்கள் பாடுகிறோம் என நினைத்து விட்டாயோ? எழுப்புவதற்காகப் பாடுகிறோம் என்று உணா!

இநதத் துயிலெழுப்பும் காட்சி நப்பின்னை வீட்டு வாயிலிலேயே நடைபெறுகிறது நப்பின்னைப்பிராட்டி, சாட்சாத் கண்ணபிரானின் மனம் உகந்த காதலி. அவள் எப்போதும கண்ணன் திருநாமத்தில் மூழ்கித் திளைப்பவள். அவளுடன் மற்றைத் தெருப பெண்களும சேர்ந்துகொண்டு, கிருஷ்ணனின் புகழ்பாடத் துடிக்கின்றனர்

'நாஙகளும் வந்து சோநது கொள்கிறோம். உன் கணவருடைய பெயரினைப் பாடி எல்லோருமாக மகிழ்நதிருப்போம கதவைத் திற, அம்மணீ!' என்று அழைபபு விடுப்பது 'உநதுமத களிற்றன்' எனும் பாடல.

.... உன் மைத்துனன பேர் பாட
செந்தாமரைக கையால சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தே லோரெம்பாவாய்.

வளைகள் கலகலக்க, நப்பின்னையை தன் செநதாமரைக் கரங்களினால் கதவைத்திறந்து விடச் சொல்கிறார்கள் ஊர்ப் பெண்கள்! அவாகள் நபபினனையுடன் இரண்டு மூன்று பாடல்கள் பாடி மகிழ்கிறார்கள். கடைசியில் கண்ணன் திருச்சந்நிதானத்துக்கே சேருகிறார்கள்.

மாமாயன் மாதவன், வைகுந்தன், இன்னும் நாராயணன், அரி என்றெலலாம் நல்ல திருநாமங்கள படைத்த அபபரநதாமனை அவர்கள் பேச்சு வாக்கில் எப்படியெலலாம் சிறுபிள்ளை போல் பாவித்துப் பழகிப் பாடியாடி வந்துள்ளார்கள்! இந்த நினைப்பு அவாகளுக்கு எழுகிறது. ஒரு குறையும இராத பரிபூர்ணத்துவத்தின் சின்னம் கண்ணன்; குறைவிலா நிறைவு.

அத்தகைய கண்ணபிரானை நமக்கு இணையான விளையாட்டுப் பிள்ளையாக மதித்து எப்படிச் சிறுபேர் அழைத்து அகமகிழ்ந்துள்ளோம்! இந்த நினைப்பு ஒரு கலக்குக் கலக்குகிறது அவர்கள் உள்ளத்தை உடனே சிறுமியர் மன்னிப்புக் கோருகின்றனா. பாடல் 'கறவைகள பின் சென்று' எனத் தொடங்குவது!

குறைவொனறும இலலாத கோவிந்தா!
உன் தன்னோடு
உறவேல நமககிங் கொழிக்க ஒழியாது!
அறியாதபிள்ளைகளோம் அன்பினால்உன்தன்னைச்
சிறுபேர் அழைநதனவும் சீறி அருளாதே.,
இறைவா!

கண்ணனின் எளிமையைத் தவறுதலாகப் பயன்படுத்திக்கொணடு விட்டபச்சாத்தாபம இவ்வடிகளில குரல் கொடுக்கிறது. எவ்வளவுதான் சிறுபேர் அழைத்தாலும், குறைவொன்றும் இல்லாத கோவிந்தன் இறைவன் ஆவார் என்னும் ஞான முதிர்ச்சியும் பாட்டில் தெரிகிறது. இவ்வாறு ஈசனின் பேரைப் பலவாறும் பாடுதற்கு எழுந்த பிரபந்தம் ஆண்டாள் திருப்பாவை.

